மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ மற்றும் அதன் துணைக்கம்பனிகள் - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீயினதும் (''கம்பனி'') மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனி மற்றும் தொகுதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெறவேண்டியவைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	ஊழியர்களிடம் இருந்து பெறவேண்டியதாக காட்டும் மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஓர் உத்தியோகத்தரிடமிருந்தான மீதியானது அறவீடு செய்யப்படல் வேண்டும். நீண்டகால நிலுவையிலுள்ள ஊழியர்களிடம் இருந்து பெறவேண்டிய மீதி ரூபா 43.44 மில்லியன் தொகையானது அவதானிக்கப்பட்டது, இது ஒரு வருடம் தொடக்கம் ஐந்து வருடங்கள் நிலுவையாக உள்ளது. நீண்டகால நிலுவையிலுள்ள ஊழியர்களிடம் இருந்து பெறவேண்டிய மீதிகளின் வயதுப் பகுப்பாய்வு பின்வரும்	இலங்கை ரூபா 43.44 மில்லியனில் 2024.12.31 இலுள்ளவாறு கம்பனி இலங்கை ரூபா 39.41 மில்லியனை வழங்கியிருந்தது. சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் உரிய ஊழியர்களிடமிருந்து அறவிடல் செயன்முறையிலுள்ளது.	தகுந்த சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் உட்பட நீண்டகாலமாக பெறவேண்டிய நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. அறவீடு செய்தல் சாத்தியமற்றதாக காணப்படும் போது விரிவாக்க நடைமுறைகள் மற்றும் சாத்தியமான பதிவளிப்புக்கள் உட்பட அந்நிலுவைகளின்

அட்டவணையில் வழங்கப்படுகின்றது.

விபரம்	நிலுவைக் காலப்பகுதி (வருடங்கள்)		
	1-3	3-5	மொத்தம்
	(ரூபா. மில்லிய	(ரூபா. மில்லிய	(ரூபா. மில்லியன்)
ஊழியர்களிடம் இருந்து பெறவேண்டியவை	4.70	38.74	43.44

அறவீட்டிற்காக ஓர் தெளிவான கொள்கை மற்றும் காலத்தினை கம்பனியானது நிறுவ வேண்டும்.

உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு என்பன கூட எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்களை குறைப்பதற்கு அவசியமாகும்.

1.5.2 செலுத்த வேண்டியவைகள்

கணக்காய்வு விடயம்

(i) ஒரு வருடம் முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கும் மேலாக நிலுவையாக உள்ள இனங்காணப்படாத நேரடி வைப்பு, சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு, வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு, அட்டுறு செலவினங்கள் மற்றும் உயிரிழந்த வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டிய வைப்பு என்பன தொடர்பாக நீண்டகாலமாக செலுத்தவேண்டிய நிலுவை மீதிகளின் மொத்தம் ரூபா 74.45 மில்லியன் அவதானிக்கப்பட்டது. நீண்டகாலமாக செலுத்த வேண்டிய நிலுவை மீதிகளின் வயதுப் பகுப்பாய்வு பின்வரும் அட்டவணையில் வழங்கப்படுகின்றது.

விபரம்	நிலுவைக் காலப்பகுதி (வருடங்கள்)			
	1-3	3-5	05 வருடங்களை விற்கு மேல்	மொத்தம்
	(ரூபா. மில்லியன்)	(ரூபா. மில்லியன்)	(ரூபா. மில்லியன்)	(ரூபா. மில்லியன்)
இனங்காணப்படாத நேரடி வைப்புக்கள்	4.11	6.85	-	10.96

முகாமைத்துவ கருத்துரை

பொதுப் பேரேட்டிலுள்ள நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பதன் மீதான சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கையின் பிரகாரம் அம்மீதிகளை தீர்ப்பதற்கு கம்பனியானது தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. இச்செயன் முறையின் ஒரு பகுதியாக, ஐந்து வருடங்களை தாண்டும் அனைத்து தீர்க்கப்படாத மீதிகளும் ஏற்றுக்கொள்ளத்தக்க பரிந்துரைகள் மற்றும் அனுமதிகளுக்கு உட்பட்டு பதிவளிக்க அல்லது மீளப்பெறப்படும்.

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கானது மொத்த நிலுவை மீதி இலங்கை ரூபா 53.19 மில்லியனை பிரதிபலிக்கின்றது. இலங்கை ரூபா 50.7 மில்லியன் தொகையான இதன் குறிப்பிடத்தக்க பகுதியானது நாவர கெப்பிடல்ஸ் தனியார் நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய நிதிகளுடன் தொடர்புபட்டதாகும். இந்நிதிகள் பல்வேறு வருடங்களிற்கு

பரிந்துரை

கம்பனியின் சபையினால் அனுமதிக்கப்பட்டகொள்கையினை பின்பற்றி நீண்டகாலமாக நிலுவையாக உள்ள செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க தேவையான படிமுறைகளை எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
மேலும், கம்பனியானது சட்ட செயற்பாடுகளினை தீவிரமாக கண்காணிக்க வேண்டியதுடன் தீர்மானத்தினை விரைவுபடுத்த உரிய அக்கறையுடைய தரப்பினர்களுடன் இணைய வும் வேண்டும். மிகுதிகள் அறவிடமுடியாதது என அல்லது இனிச்செலுத்த வேண்டியது இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால், தேவையான அனுமதிகளிற்கு உட்பட்டு கொள்கைகளின் பிரகாரம் உரிய பதிவளித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். உள்ளக கணக்கிணக்க செயன்முறையினை வழுப்படுத்தல் மற்றும் அம்மீதிகளினை தீர்ப்பதற்கான நேரத்தினை மேம்படுத்தல் போன்றன எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் திரல்வதனை

சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு	0.40	0.34	0.04	0.78	முன்னர் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் நடந்து கொண்டிருக்கும் வழக்கு காரணமாக தீர்க்கப்படாமலும் உள்ளது.	தடுக்க உதவக்கூடும்.
வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு	1.91	0.09	51.19	53.19		
அட்டுறு செலவினங்கள்	7.39	-	-	7.39		
உயிரிழந்த வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய வைப்பு	1.46	0.67	-	2.13		
மொத்தம்	**15.27**	**7.95**	**51.23**	**74.45**		

1.5.3 முற்பணங்கள்

கணக்காய்வு விடயம்

(i) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதிகள் ரூபா 1,578.82 மில்லியன் இருந்ததுடன் அந்த திகதியில் உள்ளவாறான கம்பனியின் மொத்த செயல்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களில் 26.77 சதவீதத்தினை இது பிரதிபலிக்கின்றது. விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

இல.	**வாடிக்கையாளரின் பெயர்**	**செலுத்த வேண்டிய மொத்தத் தொகை (ரூபா.மில்லியன்)**
1	மெக் ஸ்டோரெஜ் பெட்டரி (பிறைவேட்) லிமிட்டட்	387.02
2	கோர்பரேட் ரிஸ்க் மெனேஜ்மன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்	350.68
3	ஏ பி ஏ ஜுவலரி (பிறைவேட்) லிமிட்டட்	259.68
4	எம்/எஸ் கென்ட் ஹைட்ரோ	173.84

முகாமைத்துவ கருத்துரை

மெக் - சட்டத்தீர்வுகள் கோரப்பட்டுள்ளன. வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

கோர்பரேட் ரிஸ்க் மெனேஜ்மன்ட் கன்ஸல்டன்ட்ஸ் - நீதிமன்ற தீர்பானது MBSL இற்கு சாதகமாக வழங்கப்பட்டது. வாடிக்கையாளருடன் தீர்ப்பனவினை பேரம்பேசுவதன் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது.

ஏ பி ஏ ஜுவலரி (பிறைவேட்) லிமிட்டட் - தற்போது வரை ரூபா 105 மில்லியன் தொகை தீர்ப்பனவு வசூழிக்கப்பட்டுள்ளது.

எம்/எஸ் கென்ட் ஹைட்ரோ – வாடிக்கையாளர் ஒவ்வொரு மாதமும் மாதாந்த தவணைக்கட்டனம் ரூபா 5,585,000 இனை செலுத்துகின்றார்.

வோல்கர்ஸ் சன்ஸ் அன்ட் கம்பனி – நிலுவைத்தொகை முழுமையாக தீர்க்கப்பட்டது.

தயா க்ரூப் - தீர்ப்பனவு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. ரிட் நடவடிக்கைகள் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

பரிந்துரை

செயற்பாடற்ற வாடிக்கையாளர்களிடமிருந்தான நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு கம்பனியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், கடன் இடர்மதிப்பீட்டு செயன்முறைகளை வலுப்படுத்தல், பிந்திய பணமீளப்பெறல் கண்காணிப்பினை மேம்படுத்தல் மற்றும் ஆரம்ப எச்சரிக்கை பொறிமுறைகளை மேம்படுத்துதல் என்பன அதிக பெறுமதி கொண்ட செயற்பாடற்ற வாடிக்கையாளர்கள் மீளவருவதனை தடுப்பதற்கு முக்கியமானதாகும்.

	(பிறைவேட்) லிமிட்டட்	
5	வோல்கர்ஸ் சன்ஸ் அன்ட் கம்பனி என்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்	104.79
6	தயா க்ரூப் (பிறைவேட்) லிமிட்டட்	65.50
7	சீகிரிய வைஸ்ரோய் ஹோடல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்	63.73
8	திருமதி. டபல்யு.ஜ.ஆர். பெர்னான்டோ	61.94
9	டொக்டர். யூ.ஜீ.ஏ பெர்னான்டோ	57.58
10	திரு. ஆர்.ஏ.எல். விமலதாச	54.06
மொத்தம்		**1,578.82**

சீகிரிய வைஸ்ரோய் ஹோடல்ஸ் - கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள் ஓர் தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளரிற்கு விற்பனை செய்ய உடன்பட்டுள்ளனர். கொடுக்கல் வாங்கல்கள் 2025 திசெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

திருமதி. டபல்யு.ஜ.ஆர். பெர்னான்டோ – உடன்பட்ட தீர்ப்பனவுகளானது சபையினால் அனுமதிக்கப்பட்ட தீர்பனவு திட்டத்தின் பிரகாரம் பகுதி கொடுப்பனவுகளின் ஊடாக செய்யப்பட்டது. நிலுவைக்கடன்கள் 2025 திசெம்பர் அளவில் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

டொக்டர். யூ.ஜீ.ஏ பெர்னான்டோ – அடுத்த வழக்கு அழைப்புத்திகதியானது விசாரணைக்காக 2025 திசெம்பர் 16 இல் தீர்மானிக்கப்பட்டது. தீர்ப்பனவானது வாடிக்கையாளருடன் பேரம்பேசப்படுகின்றது.

திரு. ஆர்.ஏ.எல். விமலதாச – 2 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு வழக்கு 2025/10/21 இலும் மற்றையது 2026/01/12 இலும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளது.
தீர்ப்பனவானது வாடிக்கையாளருடன் பேரம்பேசப்படுகின்றது.

(ii) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓர் குறிப்பிடத்தக்க ஒருமுகப்படுத்தலுடனான கம்பனியின் மொத்த கடன் போர்ட்∴போலியோ ரூபா 30,274.94 மில்லியன் தொகையானது குத்தகை (38.63%), அடகுவைத்தல் (16.45%) மற்றும் நீண்டகால கடன்கள் (15.82%) என்பனவற்றில்
அவதானிக்கப்பட்டது. இம் மூன்று உற்பத்திகளும் முறையே உயர் உற்பத்தி ஒருமுகப்படுத்தல் ஆபத்தினை சுற்றிக்காட்டி மொத்த போர்ட் போலியோ வின் 70% ற்கு மேலானவற்றிற்கான தனித்தனி கணக்குகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கம்பனியின் மொத்த கடன் போர்ட்∴போலியோவின் உற்பத்தி ரீதியான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

தற்போது உள்ளவாறு, சிறு கடன்கள், தள்ளுபடி செய்யப்பட்ட முறிகள், நாளாந்த வசூலிப்பு, வாடகைக் கொள்வனவு மற்றும் காசோலை தள்ளுபடி வசதிகள் போன்றனவற்றினை நாங்கள் நிறுத்தியுள்ளோம்.

MBSL ஆனது கடுமையான கட்டுப்பாடுகளுடன் கடன்கள் முற்பணங்களின் புத்தகத்தினை விருத்தி செய்ய தொடங்கியுள்ளதுடன் தற்போதுள்ள முன்னனி புத்தகமானது இலங்கை ரூபா **38,795,439,104** இல் நிற்கின்றது.

செயலாற்றல், கடன்வசதி வெளிக்காட்டல் மற்றும் கடன் புத்தகங்களின் நிலைத்திருக்கும் தன்மை மற்றும் விரிதிறன் என்பனவற்றை உறுதி செய்வதற்கான இப்பிரிவுக ளின் அறவீட்டு போக்குகள் என்பனவற்றில் ஓர் விரிவான மீளாய்வினை கம்பனி செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, வீட்டுக் கடன்கள், சிறுநிதிகள் மற்றும் சலுகை முறிகள் போன்ற

உற்பத்திப் பெயர்	**2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த கடன் போர்ட்∴போலியோ** **(ரூபா மில்லியன்)**	**மொத்த கடன் போர்ட் போலியோவின் சதவீதம்** **%**
குத்தகை	11,696.54	38.63
வாடகை கொள்வனவு	275.75	0.91
மூடல் வகை 10 – எல்ஈ	8.95	0.03
தவணைக் கடன்	3,770.37	12.45
வீட்டு கடன்	43.02	0.14
மோட்டார் வாகன கடன்	77.04	0.26
உத்தியோகத்தர் கார் கடன்	147.87	0.49
உத்தியோகத்தர் கல்விக் கடன்	0.03	0.00
உத்தியோகத்தர் வீட்டுக் கடன்	0.26	0.00
உத்தியோகத்தர் தனிநபர் கடன்	49.64	0.16
குறுங்கால தவணைக் கடன்	4,790.17	15.82
சிறு கடன்	261.95	0.87
தனிநபர் கடன்	876.56	2.90
நாளாந்த அறவீடு	69.56	0.23
விலைப்பட்டியல் கழிவிடல்	456.53	1.51
காசோலை கழிவிடல்	75.11	0.25
அடகு	4,981.10	16.45
வைப்புக்களிற்கு எதிரான கடன்	688.27	2.27

குத்தகை, எஸ்டிஎல், தன்னிச்சை கடன்கள், எளிதான வரைவுகள் மற்றும் தவணைக்கடன்கள் என்பன அபிவிருத்திக்கட்டத்தில் பிரதான உற்பத்திகளாக காணப்படுகின்றது. காசுப்பாய்ச்சல்கள் மற்றும் அறவீடுகள் என்பனவற்றின் மீதான தொடர்ச்சியான பின்பற்றுதலுடன் கடுமையான கடன் எழுத்துருதி ஆனது ஒர் ஆரோக்கியமான போர்ட்∴போலியோவினை உறுதி செய்கின்றது.

குறைந்தபிரதிநிதித்துவம் கொண்ட ஆனால் சாத்தியமான உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலம் போர்ட்∴போலியோவினை பல்வகைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இப் பல்வகைப்படுத்தல், வலுவான கடன் மதிப்பீடு மற்றும் சந்தைப்பகுப்பாய்வு என்பனவற்றின் மூலம் ஆதரிக்கப்படுகின்றது, போர்ட்∴போலியோ ஸ்திரத்தன்மையை மேம்படுத்தி இது சில உற்பத்தி வகைகள் மீதான நம்பிக்கைத்தன்மையினையும் குறைக்கும். மேலும் இதன் மூலம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ கட்டமைப்பை வலுப்படுத்தல்.

ஆதன வருமான கடன்	16.93	0.06
மார்ஜின் வர்த்தகம்	1,989.29	6.57
மொத்தம்	**30,274.94**	**100.0**

1.5.4 தகவல் தொழில்நுட்ப (IT) பொதுக் கட்டுப்பாடுகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	மீட்டெடுப்பு முகாமைத்துவ செயற்பாட்டில் போதுமான ஆவணப்படுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிலையான தொழிற்பாட்டு செயன்முறைகள் (SOP) இல்லாமையானது மீட்டெடுப்பு முகாமைத்துவ செயற்பாட்டினை கையாள்வதில் சிரமம் மற்றும் பிழைகள் போன்ற பல்வேறு இடர் காரணிகளை கம்பனிக்கு முன்வைக்கின்றது. மேலும், SOP ஆவணப்படுத்தல் இல்லாமல், மீட்டெடுப்பு முகாமைத்துவ கருவியின் சீரற்ற அல்லது வினைத்திறனற்ற பயன்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது, இது ஆவணங்கள் இல்லாது நிறுவப்பட்ட செயன்முறைக்காக ஊழியர்களிற்கு பயிற்சியளிக்கும் போது சிக்கல்களைக் கூட ஏற்படுத்தக் கூடும்.	ஐஎஸ் கணக்காய்வாளர்களினால் எழுப்பப்பட்ட ஐஎஸ் கணக்காய்வு கவனத்தின் பிரகாரம், ஐடி திணைக்களமானது வீம் மீட்டெடுக்கும் தீர்வினை அமுல்படுத்தியுள்ளது. எனவே, வீம் மீட்டெடுக்கும் தீர்வின் மீட்டெடுக்கும் செயன்முறையின் பிரகாரம், அதற்கான SOP ஆவண அமுல்படுத்தலின் செயன்முறையில் ஐடி திணைக்களம் உள்ளதுடன் அது அடுத்த ஐடி வழிநடாத்தல் குழு கூட்டத்தில் (நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 27வது வழிநடாத்தல் குழு கூட்டம்) சமர்ப்பிக்கப்பட்டு இறுதி செய்யப்படும்.	புதிய மீட்டெடுக்கும் தீர்வு மற்றும் SOP ஆவணம் என்பனவற்றை மேம்படுத்துவதன் மூலம் மீட்டெடுப்பு முகாமைத்துவ செயற்பாட்டிலுள்ள ஆபத்து காரணிகளை குறைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(ii)	ஒரு நிறுவனத்திற்கு பாதுகாப்பு செயன்முறைகள் மையமனது (SOC) அவசியமானதொன்றாக காணப்படுகின்றது, ஏனெனில் அது உரிய நேரத்தில் கண்காணிக்கவும், கண்டறியவும் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிற்கு பதிலளிக்கவும் ஓர் தீர்வினை வழங்குகின்றது. கம்பனிக்குள் ஓர் SOC காணப்படாவிட்டல், இது நடந்து கொண்டிருக்கும் தாக்குதல்களில் மட்டுப்படுத்தப்பட்ட தெரிவு நிலையைக் கொண்டிருக்கலாம், இது தாக்குபவர்களிற்கு முறைமையினை சமரசம் செய்வதனையும் முக்கியமான தரவை திருடுவதனையும்	தற்போது, நாங்கள் ஏற்கனவே FINCSIRTI SOC சேவை மற்றும் அச்சுறுத்தல் புலனாய்வு சேவைகளுடன் இணைந்துள்ளோம், மேலும், 24/7/365 SOC சேவையின் தேவையினை பூர்த்தி செய்ய, நிர்வகிக்கப்பட்ட SOC இற்கான பெறுகைச் செயன்முறையினை தொடங்கியுள்ளோம். SOC ஆனது 2026 1வது காலாண்டில் அமுல்படுத்தப்படும்.	பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் குறைக்க ஓர் SOC இனை நிறுவ பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எளிதாக்குகின்றது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 240.4 மில்லியன் இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 20.8 மில்லியனாக காணப்பட்டது. ஆகையினால் நிதி விளைவுகளில் ரூபா 219.6 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 975.6 மில்லியனால் மொத்த செயற்பாட்டு வருமானம் அதிகரித்தமையே முன்னேற்றத்தக்காக பிரதான காரணமாகும்.

2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	**2024 (ரூபா '000)**	**2023 (ரூபா '000)**	**மாற்றம் (%)**	**வேறுபாட்டிற்கான காரணம்**
வட்டி மற்றும் ஒத்த வருமானம்	6,207,886	6,559,123	(5.35)	பிரதானமாக மெல்லச் செலுத்தப்பட்ட கிரயத்திலான கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள வைப்புக்கள் என்பவற்றின் சந்தை வீதங்களிற்கு இணையான வட்டி வீதங்களில் குறைவு காரணமாக வட்டி வருமானம் சற்று குறைவடைந்துள்ளது.
வட்டி மற்றும் ஒத்த செலவினங்கள்	4,021,096	4,918,658	(18.2)	வைப்பு அடிப்படை மற்றும் கம்பனியின் கடன் பெறல்கள் என்பவைகள் மீதான வட்டி வீதங்களில் குறைவு காரணமாக வட்டிச்செலவு குறைவடைந்துள்ளது.
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	211,880	123,292	71.85	பிரதானமாக 2024 ஆம் ஆண்டு காலத்தின் போது மொத்த குத்தகை மற்றும் வழங்கப்பட்ட கடன்கள் போன்ற வியாபார மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகள் அதிகரித்தமை காரணமாக கட்டணம் மற்றும் தரகு வருமானம் அதிகரித்துள்ளது.

தேறிய வியாபார வருமானம்	793,811	120,243	560.17	இலாபம் அல்லது நட்டம் (FVTPL) ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்களின் அகற்றல் மீது இலாபத்தினை உள்ளடக்கிய வியாபார நடவடிக்கைகளில் இருந்து பெறுபேறு அதிகரித்தது.
ஏனைய செயற்பாட்டு வருமானம்	111,819	116,167	(3.74)	இணைநிறுவனத்திடம் இருந்தான உண்மையான பங்கிலாப வருமானம் & நட்டம் குறைவடைந்திருந்த அதேவேளை பதிவளிக்கப்பட்ட அறவிட முடியாக்கடனின் மீளப்பெறல் மற்றும் ஆதன மற்றும் உபகரண அகற்றல் தொடர்பில் இலாபம் என்பன அதிகரித்தமையின் காரணமாக ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் குறைவு ஏற்பட்டது.
சொத்து மதிப்பிழப்பிற்கான கொடுப்பனவுக் கடன்கள் மற்றும் ஏனைய சொத்துக்களிற்கான மாற்றம்	101,111	25,094	302.92	சொத்து மதிப்பிழப்பிற்கான கொடுப்பனவுக் கடன்கள் மற்றும் ஏனைய சொத்துக்களிற்கான மாற்றமானது பிரதானமாக கூட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட மதிப்பிழப்புக்களினை குறைக்கும் போது தனிநபர் குறிப்பிடத்தக்க கடன்கள் மற்றும் பதிவளிப்புக்கள் என்பனவற்றின் மீதான மதிப்பிழப்பில் அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக அதிகரித்திருந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கிய விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட துறை விகிதங்களின் ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	**துறை விகிதம் ***	**கம்பனி 2024**	**2023**
செயலாற்றல் விகிதங்கள்			
உரிமை மீதான திரும்பல் (ROE)	13.5	6.37	0.57
சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA)	6.1	0.65	0.06
வட்டி எல்லை	10.6	6.52	5.55
சொத்துக்கள் தர விகிதம்			
மொத்த செயற்பாடற்ற	11.3	13.18	19.32

முற்பணங்கள் (NPL)			
மூலதன போதுமை விகிதங்கள்			
தட்டு மூலதனம் (ஆகக் குறைந்தது 8.5%)	20.4	11.97	13.60
மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 12.5%)	21.2	14.45	16.75
நியதிச்சட்ட விகிதம்			
திரவச் சொத்துக்கள் விகிதம்	11.4	31.19	11.59

* **நிதித்துறை – உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கீழ் உள்ள இலங்கை மத்திய வங்கி வலைதளத்தில் இருந்து துறை விகிதங்கள் பெறப்பட்டன.**

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இல.	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	மீளஅறவிடமுடியாமை காரணமாக இயக்குனர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 108.7 மில்லியன் பெறுமதியுடைய 87 எண்ணிக்கையிலான செயல்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களினை கம்பனி பதிவளித்துள்ளது.	அறவீட்டின் அனைத்து வழிகளையும் மதிப்பீடு செய்த பின்னர், பதிவளிப்பு செய்வதற்கான பரிந்துரைகள் அனுமதிக்காக வழங்கப்பட்டுள்ளது. மிகுதிகள் 2015 இல் கூட்டினையும் நேரத்திலான மரபுரிமை போர்ட்∴போலியோவினை உள்ளடக்குகின்றது. தொடர்ச்சியான அடிப்படையில் இப் பதிவளிக்கப்பட்ட மீதிகளை அறவீடு செய்ய அறவீட்டு துறையிலுள்ள ‘‘பதிவளிப்பு அறவீட்டு அணியினால்’’ மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	பதிவளிப்பதற்கு முன்பாக கடன்கள் மற்றும் முற்பணங்களினை அறவீடு செய்வதற்கும் செயல்பாடற்ற கடன்களின் எதிர்கால செயற்பாடுகளை குறைப்பதற்கான அதனது கடன் மதிப்பீட்டு செயன்முறை மற்றும் கடன் கண்காணிப்பு பொறிமுறை என்பவற்றினை வலுப்படுத்துவதற்கும் ஒவ்வொரு சாத்தியமான முயற்சியையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

இல.	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	2024 ஆம் ஆண்டின் போது பறிமுதல் செய்யப்பட்ட 125 எண்ணிக்கையான வாகனங்களினை விற்பனை செய்துள்ளது. எனினும் மேற்குறிப்பிட்ட 125 வாகனங்களில் 94 வாகனங்கள் மதிப்பீட்டு அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள கட்டாய விற்பனைப் பெறுமதியை விடவும் குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கம்பனிக்கு மொத்த நட்டமாக ரூபா 28,632,511 என கணிப்பிடப்பட்டுள்ளது.	பல்வேறு வாகனங்கள் பராமரிப்பின்றி ஓர் நீண்ட காலமாக வைக்கப்பட்டுள்ளதனை கருத்தில் கொண்டு வரையறுக்கப்பட்ட சலுகைகளுடன் தொடர்ச்சியாக விளம்பரப்படுத்தப்பட்டது, மேலும் மேலதிக அகற்றல் நட்டங்களை தவிர்க்க கிடைக்கக்கூடிய விலைமனுக்களை	சரியான நேரத்திலான விற்பனை, சந்தை நிலைமைகளை பிரதிபலிக்கும் வகையில் அவ்வப்போதான மீள் மதிப்பீடுகள், பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் குறைந்தளவிலான பராமரிப்பு மற்றும் போட்டி ரீதியான விலைமனுக்களை

		ஏற்றுக்கொள்ள ‘‘அகற்றல் குழு’’ கூட்டாக தீர்மானித்துள்ளது.	ஈர்ப்பதற்கான பரந்துபட்ட சந்தைப்படுத்தல் வழிமுறைகள் என்பனவற்றினை உறுதிப்படுத்துவதனூடாக கம்பனியானது அதன் சொத்து விற்பனை செயன்முறையினை வலுப்படுத்தவும் அதன் மூலம் சொத்து அகற்றல்கள் மூலமான எதிர்கால நட்டங்களினை குறைக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(ii)	மேற்கூறப்பட்ட 125 வாகனங்களில், 106 வாகனங்களுடன் தொடர்புபட்ட அகற்றல் திகதியில் உள்ளவாறான மொத்த மூலதன நிலுவைத் தொகை ரூபா.146,867,288 ஆகும். இருப்பினும், இன்னும் நிலுவையாக உள்ளதும் வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதுமான மிகுதி ரூபா 70,242,922 இனை தவிர்த்து வாகன அகற்றலில் இருந்தான மூலதனத் தொகை ரூபா 76,624,366 இனை மாத்திரமே கம்பனியால் அறவிட முடிந்திருந்தது. எனவே, வாகனங்களை அகற்றியதன் பின்னரும் கூட வழங்கப்பட்ட தொகையைக் கூட கம்பனியானது அறவிட்டிருக்கவில்லை. வாடிக்கையாளர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட தொகையை அறவிட ஆரம்பிப்பதன் மீது, கம்பனியானது நட்டத்தினை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது.	கம்பனியின் அறவீட்டு ஒதுக்கீட்டு முறையின் காரணத்தினால் அதிகமாக அறிக்கையிடப்பட்ட நட்டங்களானது முதன்மையானதாகும். இதன் கீழ் அறவீட்டு கட்டணங்கள் முன்னுரிமை பெறுகின்றது, அதனைத் தொடர்ந்து மூலதான அறவீட்டிற்கான மீதமுள்ள செயன்முறைகளின் 70% மான அறவீட்டிற்கும் 30% பகுதி வட்டி அறவீட்டிற்கும் ஒதுக்கப்படுகின்றது. ஒட்டு மொத்த அகற்றல் பெறுமதியும் மூலதான அறவீட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருந்தால், நட்டத்தினை ரூபா 39.5 மில்லியனாக குறைத்திருக்கலாம்.	கம்பனியினது கொள்கையினைப் பின்பற்றும் அதேநேரம் கம்பனிக்கு ஏற்படக்கூடிய நட்டத்தினை குறைக்கக்கூடிய வகையில் விவேகமான முறையில் தீர்மானங்களை எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கம்பனியானது அதிக ஆபத்துள்ள கணக்குகளை உன்னிப்பாக கண்காணிப்பதனூடாகவும் சரியான நேரத்தில் அறவீட்டு நடவடிக்கைகளை தொடங்குவதன் மூலமும் அறவீட்டு யுக்திகள் உகந்ததாக இருப்பதனை உறுதி செய்வதன் மூலமும் எதிர்கால நட்டங்களினை குறைப்பதன் மூலமும் அதன் கடன் இடர் முகாமைத்துவத்தினை வலுப்படுத்த வேண்டும்.

(iii) தரிப்பிடத்தில் இருந்தான பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களினை அகற்றும் போது குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. 2025 ஜுலை 31 இல் உள்ளபடியான தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட 56 வாகனங்களில் 43 வாகனங்கள் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது பல ஆண்டுகளுக்கு மேலாக அதிக பராமரிப்புக் கிரயங்கள் ஏற்படுத்தக்கூடும் என்பதோடு சந்தைப் பெறுமதி குறைவடைந்து நட்டங்களும் ஏற்படக்கூடும். வாகனங்களின் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலப்பகுதியுடன் தொடர்புடைய விபரங்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி	**வாகனங்களின் எண்ணிக்கை**
1 – 3 வருடங்கள்	04
3 – 5 வருடங்கள்	06
05 வருடங்களுக்கு மேல்	37
மொத்தம்	**47**

2025 ஜுலை 31 இல் உள்ளவாறு, எங்களது தரிப்பிடத்தில் 56 வாகனங்கள் இருந்தது. அதில், 44 வாகனங்கள் நீதிமன்ற பிணைப்பிலுள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற கட்டளையினூடாக பிணைகள் ரத்துச்செய்யப்படும் வரை விற்பனை செய்யவும் முடியாது. மூன்று (03) வாகனங்கள் வாடிக்கையாளரினால் ஆர்எம்வி ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ள அதேவேளை மிகுதி ஒன்பதிலிருந்தான நான்கு (04) வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது, எஞ்சியுள்ள ஐந்து (05) வாகனங்கள் மாத்திரமே இன்னும் தரிப்பிடத்தில் உள்ளன.

வைத்திருக்கும் காலப்பகுதியினை குறைக்கவும், பராமரிப்புச் செலவுகளைக் குறைக்கவும், மற்றும் பாரிய வாகனங்களின் சந்தைப் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைவதனை தவிர்க்கவும் நீதிமன்ற பிணை மற்றும் ஆர்எம்வி ஆட்சேபனை வழக்குகள் என்பனவற்றுடன் தொடர்புபட்ட சட்ட மற்றும் நிர்வாக செயன்முறைகளை கம்பனியானது விரைவுபடுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(iv) கடன் இல. – 7620941

மூன்று நோக்கங்களை எதிர் கொள்வதற்காக 2020 இல் ஓர் குறித்த வாடிக்கையாளரிற்கு ரூபா 8.5 மில்லியன் தவணைக்கடன் வசதியினை கம்பனி வழங்கியிருந்தது. பிரதான நோக்கம் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களைத் தீர்ப்பதாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.	இக் கடன்கள் 2025 செப்தம்பர் 10 இல் முழுமையாக தீர்ப்பவு செய்யப்பட்டுள்ளது.	கடன் கொள்கை அறிவுறுத்தல்களை பின்பற்ற பரிந்துரைக்கப்பட்டுள்ளது டன் செயற்பாடற்ற கடன்களின் எதிர்கால நிகழ்வுகளை குறைப்பதற்கு கடன் வழங்கும் போது ஆவணங்களின் உண்மைத்தன்மையானது கட்டாயம் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.
• செயன்முறைக் கையேட்டின் பிரிவு 6.3.2(2) இன் பிரகாரம், கம்பனியானது கையேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த பின்வரும் நிபந்தனைகளுடன் முன்னய கடன்களை மதிப்பீடு செய்திருக்கவில்லை. • சீரான திருப்திகர கொடுப்பனவு. • மூலதனத்தில் 35 சதவீதத்திற்கும் மேல் செலுத்தப்பட்டுள்ளது. • இவ் வசதியானது சுழற்சி/மூலதன STL வசதியாக இருந்தால், நிலுவை வட்டி தவிர்ந்த மொத்த மூலதன நிலுவையினை மீளப்பெற்றுக் கொள்ள முடியும். • காரணங்கள் MBSL இனால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.	கருத்துரையுடன் உடன்பட்டனர்.	
• வாடிக்கையாளரின் மீளச்செலுத்தும் இயலுமையானது முறையாக மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன் எவ்வித செல்லுபடியாகும் வருமானத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்துரையுடன் உடன்பட்டனர்.	

	• கம்பனியானது 2021 இல் வசதியளிப்புக்களினை மீளமைப்புச் செய்திருந்ததுடன் இரண்டாம்கட்ட ஈடுவைத்தல் பிணையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டாம்கட்ட ஈடுவைத்தல் பிணையானது சலுகைக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துரையுடன் உடன்பட்டனர்.	
	• கடன் முறைமை ஆவணங்களின் பிரகாரம் கடன் தவணைகள் மீதான சலுகைக் கடனானது 2021 இல் வழங்கப்பட்டிருந்தும், விண்ணப்பதாரரினால் செய்யப்பட்ட வேண்டுகோள், மதிப்பீடுதல், மதிப்பீடு, செயலாற்றல் போன்ற ஆவணச் சான்றுகள் கடன் கோப்பினுள் காணப்பட்டிருக்கவில்லை.	கருத்துரையுடன் உடன்பட்டனர்.	
(v)	கடன் இல. – 7193199 கம்பனியானது 2019 முதல் 2021 வரை ஓர் குறிப்பிட்ட வாடிக்கையாளரிற்கு பல தடவை தவணை கடன்கள், சலுகைக் கடன் வசதிகள் என்பவற்றினை வழங்கியுள்ளது. தற்போதைய வசதிகளின் மீளச் செலுத்தல்கள் முறையாக இல்லாததனால், 2021 இல், அனைத்து தற்போதைய கடன்களினையும் ரூபா 71.5 மில்லியன் தொகையான ஒரு கடனான மாற்றுவதனூடாக கம்பனியானது வசதிகளை மீளமைப்புச் செய்திருந்தது. மீளமைக்கப்பட்ட வசதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.		செயற்பாடற்ற கடன்களின் எதிர்கால நிகழ்வுகளை குறைப்பதற்கு கடன் வழங்கும் போது கடன் கொள்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஆவணங்களின் உண்மைத்தன்மை என்பன மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.
	• கடன் நடைமுறை கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கு முரணாக இயக்குனர் சபையின் அங்கீகாரத்துடன் கட்டாய விற்பனைகள் பெறுமதியினை (FSV) விஞ்சி மொத்த கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.	கருத்துரையுடன் உடன்பட்டனர். தொற்று நோய்ப்பரவல் காலப்பகுதியின் போதான வாடிக்கையாளரின் காசுப்பாய்ச்சல் கட்டுப்பாடுகளின் அனுபவத்தினை கருத்தில் கொண்டு LTV மாறலிற்கான BOD அனுமதியின் அடிப்படையில் 2019.06.10 ஆம்	

		திகதிய இலங்கை ரூபா 71.84 மில்லியனின் சொத்து மதிப்பீட்டின் சந்தைப் பெறுமதியிலிருந்து 100% வரையான வெளிக்காட்டுதலை கருத்தில்கொண்டு இலங்கை ரூபா 71.5 மில்லியனின் மறுசீரமைப்பானது வழங்கப்பட்டிருந்தது.	
	• கம்பனியானது நிதி நிலைமையினை மதிப்பீடு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களினை பெற்றிருக்கவில்லை.	கருத்துரையுடன் உடன்பட்டனர். வசதிகளை வழங்கும் நேரத்தில் கணக்காய்வு முடிவு பெற்றிறாததனால், 2019 & 2020 இன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் 2021 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ நிதிக் கூற்றுக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.	
	• 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிலுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், கடன்பெறும் கம்பனியானது திருப்தியில்லாத நிதிச்செயலாற்றலினை காட்டியது.	கருத்துரையுடன் உடன்பட்டனர். வழங்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்ட விண்ணப்பதார கம்பனியின் கூறப்பட்ட திருப்திகரமற்ற நிலைப்பாடானது கடன் மதிப்பீடுகளின் நிதி சிறப்பம்சங்கள் பிரிவு இல. 9.2 இன் கீழ் கவனத்தில் கொள்ளப்பட்டு கருத்துரைக்கப்பட்டது. வெளியேறும் திட்டத்திற்கு வழிவகுப்பதற்காக இவ் வசதி மறுசீரமைக்கப்பட்டதாக கவனத்தில் கொள்ளப்பட்டது.	
(vi)	கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2015 இற்கு முன்னர் வழங்கிய வசதிகளுடன் தொடர்புபட்ட 14 கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களைக் கொண்டுள்ளது. வசதிகளானது செயற்பாடற்று போனதன் பின்னர், கம்பனியானது நிலுவைக் கடன்களை அறவீடு செய்வதற்கு இவ் ஆதனங்களை கொள்வனவு செய்திருந்தது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மூலதன நிலுவைத் தொகையான ரூபா 61,151,284 ஆனது 06 கொள்வனவு	கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களானது வாடிக்கையாளர்களினால் தவறவிடப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட வசதிகளுடன் தொடர்புபட்டதாகும். MBSL இனால் ஆதனம் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் முடிந்தளவு	கையகப்படுத்தப்பட்ட ஆதனங்களைவிற்பனை செய்யவும் நிலுவைக் கடன்களை அறவிடவும் பதிவளிக்கப்பட்ட கடன் மீதிகளுக்கு எதிராக கம்பனியின் வருமானத்தினை அதிகரிக்கவும் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் எடுக்க

செய்யப்பட்ட ஆதனங்களுடன் தொடர்புபட்டதாகும்.	விரைவில் இவ் ஆதனங்களினை விற்பனை செய்யும் பொறுப்பு MBSL இன் ஆதன வருமான திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில கடன் மீதிகளானது பல ஆண்டுகளிற்கு முன்னர் பதிவளிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது முறைமையில் எவ்வித மீதிகளும் காணப்படவில்லை. இக் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களின் விற்பனையானது சட்டப்பிணக்குகள், ஆதனத்தை கண்டுபிடிக்க முடியாமை மற்றும் விளம்பரப்படுத்தப்பட்ட பின்னர் ஆதனங்களை வாங்க கொள்வனவாளர்கள் இல்லாமை பேன்றன காரணமாக சில நேரங்களில் நீண்ட காலம் எடுக்கின்றது.	பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏதாவது மீதமாகவுள்ள மீதிகளை அறவிடவும் வைத்திருத்தல் செலவுகளை குறைக்கவும் முடியுமானவரை கையகப்படுத்தப்பட்ட ஆதனங்களின் விற்பனைச் செயன்முறையினை கம்பனியானது விரைவுபடுத்த வேண்டும். சட்ட பிணக்குகளிற்கு சரியான நேரத்தில் தீர்வு காண்பதனை உறுதி செய்ய சட்ட அதிகாரசபைகளுடான தொடர்ச்சியான பின்பற்றல் மற்றும் முகாமைத்துவத்தினால் காலரீதியாக மதிப்பீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சாத்தியமான கொள்வனவாளர்களை ஈர்க்கவும் விரைவாக விற்பனை செய்ய உதவவும் பொருத்தமான சந்தைப்படுத்தல் உக்திகளை ஆரம்பிக்க வேண்டும்.

3.3 பெறுகைகள்

இல.	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	தொழிற்பாட்டு மற்றும் தந்திரோபாய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக “MINT HRM” எனும் கிளவுட் அடிப்படையிலான மனித வள முகாமைத்துவ முறைமையினை ரூபா 5,887,500 மொத்த கிரயத்தில் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் இடம்பெற்றன. இம் முறைமையானது செயற்பாட்டு தொகுதி, தந்திரோபாய தொகுதி மற்றும் இழப்பீட்டுத் தொகுதி போன்ற மூன்று தொகுதிகளை உள்ளடக்குகின்றது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட காலநேரத்தின் படி இத் தொகுதிகளானது 120 நாட்களிற்குள் அமுல்படுத்தப்படல் வேண்டும். MINT HRM முறைமையினை அமுல்படுத்தும் போது மதிப்பிடப்பட்ட நேரத்திற்கும் உண்மையான நேரத்திற்கும் இடையே சில நேர வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 துணை தொகுதிகளில் 5 அமுல்படுத்தப்பட்டிராததுடன் 1 தொகுதி காணப்பட்டிருக்கவுமில்லை.	முழு கொடுப்பனவும் செய்யப்பட்டிருக்கவில்லை. ஓர் விலைக் கழிவு பேரம்பேசப்பட்டுள்ளது. சம்பளப்பட்டியல் தொழிற்பாடு 3ஆம் நபரிற்கு வழங்கப்பட்டிருந்ததனால் சம்பளப்பட்டியல் தொகுதியானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இத் தொகுதிகளானது பயன்படுத்தப்படாத 2 உப தொகுதிகளையும் உள்ளடக்குகின்றது. ஏனைய 3 உப தொகுதிகளும் தந்திரோபாய பிரதான தொகுதிகளுடன் தொடர்புபட்டது, அதன் உள்ளமைப்பானது MINT HRM இனால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். இரண்டு தொகுதிகளை மாத்திரம் அமுல்படுத்தவும் உண்மையான விலையிலிருந்து ரூபா 387,500 விலை குறைப்பிற்குமான ஓர் சபை அனுமதி 2025 செப்தம்பர் 29 இல் பெறப்பட்டது.	ஓர் உடன்படிக்கையினை ஏற்படுத்த முன்னர் கம்பனியின் தேவைப்பாடுகள் நிவர்த்திசெய்யப்பட்டதனை உறுதிப்படுத்த முறைமையின் ஓர் சாத்தியவள கற்கையினை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது, மேலும் திருத்தியமைக்கப்பட்ட முறைமையை அமுல்படுத்தல் வேலைப்பரப்பு மற்றும் விலைகளானது விற்பனையாளர் உடன்படிக்கை மற்றும் உரிய கணக்கீட்டு பதிவுகளில் முறையாக பிரதிபலிக்கப்பட்டதனையும் முகாமைத்துவமானது உறுதிப்படுத்த வேண்டும்.

(ii)	ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விதிமுறைகளின் பிரகாரம், அனைத்து தொகுதிகளும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவுடனேயே எழுபது சதவீதமான கொடுப்பனவுகளானது செய்யப்படல் வேண்டும். 2024 திசெம்பர் 31 வரை 17 உப தொகுதிகளில் 6 ஆரம்பிக்கப்படாமலிருந்தும், 2023 ஒகஸ்ட் வரை எழுபது சதவீதமான கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.	இரண்டு தொகுதிகளை மாத்திரம் அமுல்படுத்தவும் உண்மையான விலையிலிருந்து ரூபா 387,500 விலை குறைப்பிற்குமான ஓர் சபை அனுமதி 2025 செப்தம்பர் 29 இல் பெறப்பட்டது. செயற்பாட்டு தொகுதியானது தற்போது HR பிரிவினால் முழுமையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.	கம்பனியின் நிதிகளைப் பாதுகாக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட மைல்கற்கல் மற்றும் பூர்த்திசெய்யப்பட்டதன் உறுதிப்படுத்தல்கள் என்பனவற்றிற்கு ஏற்ப எதிர்கால முறைமை அமுல்படுத்தல் கொடுப்பனவுகள் கண்டிப்பாக செய்யப்படுவதனை முகாமையானது உறுதிசெய்ய வேண்டும். செயற்திட்ட வேலைப்பரப்பு அல்லது கொடுப்பனவு விதிமுறைகளில் ஏதாவது மாற்றமானது முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, சபையினால் அனுமதிக்கப்பட்டு விற்பனையாளர் உடன்படிக்கையில் பிரதிபலிக்கப்படல் வேண்டும். அதற்கு மேலதிகமாக, முறைமையானது உத்தேசிக்கப்பட்டுள்ள நன்மைகளினை வழங்குவதனை உறுதி செய்ய அமுல்படுத்தப்பட்ட தொகுதிகளின் செயலாற்றல் மற்றும் பயன்பாட்டினை முகாமையானது உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.

3.4 மனித வள முகாமைத்துவம்

இல.	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	2024 ஆம் ஆண்டின் போது இருநூற்று பதின் நான்கு (214) எண்ணிக்கையிலான ஊழியர்கள் கம்பனியில் இருந்து நீங்கிச் சென்றுள்ளனர். 2024 ஜனவரி 01 இல் உள்ளவாறாக காணப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் 27.05 சதவீதத்தினை இது பிரதிபலிக்கின்றது. இது மீளாய்வாண்டின் போதான கம்பனியின் உயர் ஊழியர் புரள்வினை குறிப்பிடுகின்றது.	MBSL ஊழியர்களின் வர்த்தக சங்கத்துடன் 2025 இல் கூட்டு ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், MBSL உடன் தொடர்ந்து இருப்பதற்காக ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் வசதிகளை அதிகரித்தல். குறிப்பிடப்பட்ட 214 ஆனது 201 நிரந்தர ஆளனியினரையும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் பணிக்கமர்த்தப்பட்ட 13 பயிற்சியாளர்களாயும் உள்ளடக்குகின்றது. ராஜினாமா செய்த அதிகளவான உத்தியோகத்தர்கள் கம்பனியின் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளைச் சேர்ந்தவர்கள்.	கம்பனியின் செயற்பாடுகளின் சீரான செயற்பாட்டிற்கு உதவக்கூடிய வேலைத்திருப்தி மற்றும் கம்பனியின் ஊழியர்களை தக்கவைப்பதனை மேம்படுத்த பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.